## மெட்ரோ ரயிலில் கொரோனா விதிகளை மீறும்

# பயணிகளை கண்காணிக்க குழு

சென்னை, ஜூன் 29: ஊரடங்கு தளர்வு காரணமாக சென்னையில் கடந்த 21ம் தேதி முதல் மெட்ரோ ரயில்கள் இயங்கி வருகிறது. கூட்ட நெரிசல் மிகுந்த நேரங்களில் 5 நிமிடத்திற்கு ஒரு ரயிலும், மற்ற நேரங்களில் 10 நிமிடத்திற்கு ஒரு ரயிலும் என இயக்கப்படுகிறது. மேலும், மெட்ரோ ரயில் நிலையங்களில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் தீவிரமாக கடைபிடித்து வருகிறது.

இந்த நிலையில், பயணிகள் கொரோனா தடுப்பு விதிமுறைகளை சரியாக கடைபிடிக்கின்றனரா என்பதை கண்காணிக்க நிலையங்கள் தோறும் கண்காணிப்பு குழுவை மெட்ரோ ரயில் நிர்வாகம் அமைத்துள்ளது. நிலைய கட்டுப்பாட்டாளர்கள் தலைமையிலான இந்த குழு சுழற்சி முறையில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறது.

நுழைவாயில், வெளியேறும் வாயில்கள், ரயில் பெட்டிகள் ஆகியவற்றில் கண்காணிப்பு பணியாளர்கள் பயணிகளை தொடர்ந்து கண்காணிப்பார்கள். சிசிடிவி கேமராக்கள் மூலமும் பயணிகள் கண்காணிக்கப்படுகிறார்கள். முகக்கவசம் அணியாத நபர்கள் அல்லது முகக்கவசத்தை சரியாக அணியாத நபர்களிடம் இந்த குழு அபராதத் தொகையாக ரூ.200 வசூலிக்கும்.

### பயண அட்டை காலம் நீட்டிப்பு

மெட்ரோ ரயில் நிர்வாகம் பொதுமுடக்க காலமான கடந்த மே 10ம் தேதி முதல் ஜூன் 20ம் தேதி வரை பயணிகள் பயன்படுத்தாத பயண அட்டைகளில் உள்ள பயண எண்ணிக்கையை அதற்கு சமமாக செல்லுபடியாகும் காலத்தை நீட்டியுள்ளது. எனவே பயணிகள் தங்கள் பயண அட்டையில் உள்ள பயண எண்ணிக்கையின் அளவை நீட்டித்துக்கொள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் உள்ள வாடிக்கையாளர் சேவையை அணுகலாம்.